**கவனிக்க.**- 2026.08.28 ஆந் திகதிய 2504 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2505 - 2026 සැප්තැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2026.09.04

2505 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும்  வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 3092 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 3099 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3089 - B 82827 (2026/09)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## ஹோமியோபதி மருத்துவ சபை

## ஹோமியோபதி மருத்துவ அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்பு

ஹோமியோபதி மருத்துவ சபையினால் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய அரசாங்க ஹோமியோபதி மருத்துவ நிலையங்களுக்காக ஹோமியோபதி மருத்துவ அதிகாரி பதவிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவி** : ஹோமியோபதி மருத்துவ அதிகாரி

02. **நியமனத்தின் தன்மை** : நிரந்தர நியமனம். ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) நலன்களுக்கு உரிமையுடையது.

03. **சம்பள அளவுத் திட்டம்** : சேவைப் பிரிவு குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:

(MM 1-1-2016 : ரூ. 53,175.00 – 10×1,375 – 15×1,910 – 95,575.00)

04. **தேவையான தகைமைகள்** : இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக் கழகம் ஒன்றில் ஐந்தரை (5½) ஆண்டுகளுக்கு குறையாத பட்டப்படிப்பு நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து ஹோமியோபதி மருத்துவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நான்கு (04) ஆண்டுகளுக்கு குறையாத முழு நேர ஹோமியோபதி மருத்துவ டிப்ளோமா படிப்பை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததுடன், அதன் பின்னர் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் தொழில்துறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

மேலும்

குறைந்தது ஒரு (01) வருட Internship Training (இடைநிலைப் பயிற்சி) பூர்த்தி செய்திருக்க வேண்டும் மற்றும் ஹோமியோபதி மருத்துவ சபையில் ஹோமியோபதி மருத்துவராகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மருத்துவமனை, நிறுவனம் அல்லது சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை வழங்கிய அனுபவத் துடன் குறைந்தது ஒரு (01) வருட தொழில்துறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (சிகிச்சை பெற்ற நோயாளர்களின் பதிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரின் உத்தியோகபூர்வ முத்திரையுடன் கூடிய சான்றிதழ் சமர்ப்பிக் கப்பட வேண்டும். தனியார் நிறுவனம் எனில், அந்த நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்திற்கான பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

05. **வயது எல்லை** : 25 வயதுக்கு குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவரா கவும் இருத்தல் வேண்டும்.

06. **ஏனைய தகைமைகள்** : ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. பதவிக்குரிய கடமைகளை திறம்பட நிறைவேற்றவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் சேவை செய்யவும் தேவையான உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. நல்லொழுக்கமும் நன்னடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

07. **ஆட்சேர்ப்பு முறை :**

நியமன அதிகாரியால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் நடாத்தப்படும் Structured Interview (கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு) இல் பெறப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

08. **தகைமைகள் கணிக்கப்படும் திகதி**:

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 04, 05 மற்றும் 06 ஆம் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் விண்ணப்பதாரர் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

09. **விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி** :

விண்ணப்பங்கள் முழுமையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். 04 மற்றும் 05 ஆம் பகுதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை நிரூபிப்பதற்காக கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

ஆட்சேர்ப்பிற்கு முன்னர் விண்ணப்பதாரர் வழங்கிய தகவல்களில் ஏதேனும் பொய்யானது அல்லது தவறானது என கண்டறியப்பட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் அவ்வாறு தெரிய வந்தால் நடைமுறைகளுக்கமைவாக சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **நியமன அதிகாரம் :**

நியமன அதிகாரமானது ஹோமியோபதி மருத்துவ சபைக்கு உரித்துடையதாகும். அதன் தீர்மானமே இறுதியானதாகும். தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

வைத்தியர் டி.எம்.என்.பி. தென்னகோன்,
பதிவாளர் (பதில்கடமை),
ஹோமியோபதி மருத்துவ சபை.

ஹோமியோபதி மருத்துவ சபை,
இல 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,
வெலிசர,
றாகம,
2026, செத்தெம்பர் 18.

09-45

**சுற்றாடல் அமைச்சு**

## கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தில் ஆரம்ப – திறன் அல்லாத சேவைப் பிரிவின் கள உதவியாளர் (மேற்பார்வை) பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல் – 2026

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் ஆரம்ப – திறன் அல்லாத சேவைப் பிரிவில் உள்ள கள உதவியாளர் (மேற்பார்வை) பதவிகளுக்கான 11 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :**

(I) **கல்வித் தகைமை:**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(II) **அனுபவம்:**

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் ஆரம்ப – திறன் அல்லாத சேவைப் பிரிவில் கள உதவியாளர் பதவியில் 10 வருடங்களுக்கான நிரந்தரமான, தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(III) **உடற் தகைமை:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் தேவையான நல்ல உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

(V) **ஏனையவை:**

(அ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நற்பண்பும் நன்னடத்தையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

(ஆ) கடந்த ஐந்து வருடங்களில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல், சம்பள உயர்வுகளைப் பெற்றிருத்தல் மற்றும் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் பணித்திறனை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்கு நியமனம் பெறுவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(VI) **வயது:** பொருந்தாது.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக, மாதாந்த சம்பள அளவுத்திட்டம் : ரூ. 40,000.00 – 10 × 450 – 10 × 490 – 10 × 540 – 12 × 590 – ரூ. 61,880.00 (PL 1 – 2025) ஆகும்.

04. சேவையில் நியமிக்கப்படுவதற்கான பொதுவான விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்

(அ) கள உதவியாளர் (மேற்பார்வை) பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்களின் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத்துக்கு உரித்துடையதாகும். (ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர் காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்.)

(ஆ) ஒரு வருட பரீட்சார்த்த சேவைக் காலத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(இ) பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் மூன்று (03) வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(ஈ) தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

05. **பதவிகளுக்கான தெரிவு முறை :**

இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கும் அலுவலர்களில், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் கள உதவியாளர் பதவியில் நிரந்தரமான, தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். அந்த நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் வரிசைப்படி, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அலுவலர்கள் நியமிக்கப்படுவர். கள உதவியாளர் (மேற்பார்வை) பதவிக்கு நியமனம் பெறுவதற்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் குறைந்தபட்சம் 55 புள்ளிகளைப் பெற வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும்:

| *இல.* | *மதிப்பீடு செய்யப்படும் துறை* | *அதிகபட்ச புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | சேவை அனுபவம் | 40 | 55 (01–04) |
| 02 | **அனுபவம்** – கடலோரப் பாதுகாப்புப் பணித்தளங்களில் பெற்றுள்ள அனுபவம் (கற்சுவர்/கல் தடுப்புகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பான அறிவு – வாய்மொழிப் பரீட்சையின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்) | 15 | |
| 03 | இயந்திர உபகரணங்கள் மற்றும் கனரக வாகனங்கள் தொடர்பான அறிவு | 10 | |
| 04 | இயந்திர உபகரணங்களைப் பராமரித்தல் மற்றும் இயக்குதல் தொடர்பான அறிவு | 10 | |
| 05 | கடலோரப் பாதுகாப்புப் பணிகளின்போது பொறுப்புகளை ஏற்றுச் செயலாற்றியமை | 20 | |
| 06 | ஆளுமை | 05 | |
| | மொத்தம் | 100 | |

06. **விண்ணப்பிக்கும் முறை :**

இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2026.10.05 அன்று அல்லது அதற்கு முன்னர், “பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம், த.பெ. 556, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10” என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகக் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் “கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் கள உதவியாளர் (மேற்பார்வை) பதவியை நிரப்புதல்” என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்களும், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.)

07. **தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் :**

(அ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கத் தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள், ஆவணங்கள் மூலம் தங்களது தகைமைகளை நிரூபிக்க வேண்டும்.

(ஆ) நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களின் அசல் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

1. பிறப்புச் சான்றிதழ்.
2. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
3. தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.
4. கள உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட கடிதம்.
5. கள உதவியாளர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட கடிதம்.
6. ஏனைய தொடர்புடைய சான்றிதழ்கள்

08. **தவறான தகவல்களை வழங்குதல் :**

விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது என்பது நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், அவரது/அவருடைய விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல்கள் நியமனத்திற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதற்குரிய சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டு, அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

09. **ஏனைய விடயங்கள் :**

இந்த விதிமுறைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் தொடர்புடைய விடயம் இருப்பின், அது கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் விருப்பத்திற்கிணங்க தீர்மானிக்கப்படும்.

இந்த அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழிப் பதிப்பே மேலோங்கும்.

பேராசிரியர் பி.பி. டர்னி பிரதீப் குமார,
பணிப்பாளர் நாயகம்.

கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களம்,
த.பெ. 556,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை, கொழும்பு 10.
2026.09.04

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுற்றாடல் அமைச்சு**

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தில் ஆரம்ப – திறன் அல்லாத சேவைப் பிரிவின் கள உதவியாளர் (மேற்பார்வை) பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல் – 2026**

01. 1.1 முழுப் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்): ..........................................................................................................
..........................................................................................................

1.2 குடும்பப் பெயரை முதலில் குறிப்பிட்டு, ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களைப் பின்னர் குறிப்பிட்டு, பெயரை ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதுக : ..........................................................................................................
(உதாரணம் : GUNAWARDANA H.M.S.K.)

02. 2.1 நிரந்தர வசிப்பிட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :..........................................................................................................
..........................................................................................................

2.2 பிரதேச செயலாளர் பிரிவு: ..........................................................................................................

2.3 கிராம அலுவலர் பிரிவு:..........................................................................................................

2.4 கையடக்கத் தொலைபேசி : | | | | | | | | | | |

03. 3.1 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

3.2 வழங்கப்பட்ட திகதி: [ ]

04. 4.1 பால்:

ஆண் – 0 [ ]

பெண் – 1 (பொருத்தமான இலக்கத்தை பெட்டிக்குள் குறிப்பிடவும்.)

05. 5.1 பிறந்த திகதி:

ஆண்டு : …………….  மாதம்: ………………..  திகதி : ...................

5.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது:

வருடங்கள்: ☐☐  மாதங்கள் : ☐☐  நாட்கள்: ☐☐

06.6.1 நீங்கள் இலங்கைப் பிரசையாக இருப்பது:

- பரம்பரையின் மூலம் – 1
- பதிவின் மூலம் – 2 ☐

(பொருத்தமான இலக்கத்தை பெட்டிக்குள் குறிப்பிடவும்.)

6.2 இனம்:

- சிங்களவர் – 1
- இலங்கைத் தமிழர் – 2 ☐
- இந்தியத் தமிழர் – 3
- முஸ்லிம் – 4
- பறங்கியர் – 5
- ஏனையோர் – 6 (பொருத்தமான இலக்கத்தை பெட்டிக்குள் குறிப்பிடவும்.)

07. திருமண நிலை:

| | |
|---|---|
| திருமணமானவர் | |
| திருமணமாகாதவர் | |
| விதவை/தபுதாரர் | |

08 8.1 தற்போதைய சேவை நிலையத்தின் பெயர் :...................................................................................................................

8.2 கள உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி: ...................................................................................................

8.3 கள உதவியாளர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி: ...........................................................................................

8.4 கள உதவியாளர் பதவியில் சேவைக் காலம்: ................................................................................................................

09. நீங்கள் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? ........................................................................
...............................................................................

அவ்வாறுஇருப்பின்,காரணத்தைகுறிப்பிடவும்:.......................................................................................................................
.......................................................................................................................................................

10. **க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் :**

| வருடம்: : ........................ சுட்டெண்: .......................................... | |
|---|---|
| பாடம் | பெறுபேறு |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

**11. க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் :**

| வருடம்: : ........................ சுட்டெண்: .......................................... | |
|---|---|
| பாடம் | பெறுபேறு |
| | |
| | |
| | |
| | |

12. **ஏனைய கல்வித் தகைமைகள் :**

......................................................................................................................................................
......................................................................................................................................................

13. **தொழில்சார் தகைமைகள் :**

......................................................................................................................................................
......................................................................................................................................................

14. **விண்ணப்பதாரரின் பிரகடனம் / சான்றுறுதிப்படுத்தல் .-**

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை என இதன் மூலம் சான்றளிக்கிறேன். என்னை இப்பதவிக்கு தெரிவு செய்வதற்கு முன்னர், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது என தெரியவரும் பட்சத்தில், நான் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதையும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவ்வாறு தெரியவரும் பட்சத்தில், எவ்வித இழப்பீடும் வழங்கப்படாமல் என்னை சேவையிலிருந்து நீக்குவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

....................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி: ................................

---

**திணைக்களத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்**

01. கடந்த 05 வருட காலப்பகுதியில் இந்த அலுவலருக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா / எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

ஆம் / இல்லை :-

02. பதில் “ஆம்” எனில், அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

......................................................................................................................................................
......................................................................................................................................................
......................................................................................................................................................

03. அலுவலர் தனது சேவைக் காலத்தில் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுள்ளாரா?

ஆம் / இல்லை :-

04. பதில் "ஆம்" எனில், பெற்றுக்கொண்ட சம்பளமற்ற விடுமுறையின் எண்ணிக்கை எவ்வளவு?

| *இல.* | *விடுமுறை அனுமதிக்கு தொடர்புடைய நிபந்தனை* | *காலப்பகுதி* | |
|---|---|---|---|
| | | *முதல்* | *வரை* |
| i. | தாபனக் கோவையின் < V:2:5:4 | | |
| ii. | தாபனக் கோவையின் < XII:16 | | |
| iii. | முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 10 | | |
| iv. | முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 33 | | |
| v. | தாபனக் கோவையின் < XII:36 | | |
| vi. | ஏனைய சம்பளமற்ற விடுமுறை | | |
| vii | விடுமுறை அனுமதிக்கு தொடர்புடைய நிபந்தனை | | |

இந்தத் திணைக்களத்தில் ........................................................................................................ பதவியை வகிக்கும் ........................................................................... அவர்களின் விண்ணப்பத்தைப் பரிந்துரைத்து சமர்ப்பிக்கிறேன்.

திகதி : .......................................

..........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
உத்தியோகபூர்வ முத்திரை

09 - 46

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் இலங்கை மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவையின் பணிநிலை அத்தியட்சகர் பதவி தரம் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவைப் பிரிவின் பணிநிலை அத்தியட்சகர் பதவியில் நிலவும் இரண்டு (02) வெற்றிடங்களை நிரப்புவதற்காக, கீழே 02 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு நடைமுறை –**

மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவைகள் வகையிலான பணிநிலை அத்தியட்சகர் பதவியிலுள்ள வெற்றிடங்கள், பின்வரும் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த நபர்களை எழுத்து மூலப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, அதன் முடிவுகளின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட காணி ஆணையாளர் நாயகத்தினால் நியமனம் வழங்கப்பட்டு வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

02. **தகைமைகள் –**

I. கல்வித் தகைமைகள் –

ஒரே அமர்வில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் (General Certificate of Education - Advanced Level) மூன்று (03) அறிவியல் பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் கட்டாயமாக இணைந்த கணிதம் (Combined Mathematics) மற்றும் பௌதிகவியல் (Physics), இரசாயனவியல் (Chemistry), பொறியியல் தொழில்நுட்பம் (Engineering Technology) ஆகிய பாடங்களில் ஏதேனும் இரண்டு (02) பாடங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

மற்றும்

ஒரே அமர்வில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் (General Certificate of Education - Ordinary Level) ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு (01) பாடத்தில் திறமைச் சித்தி (Credit Pass) பெற்றிருக்க வேண்டும்.

II. தொழில்முறைத் தகைமைகள் –

மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (National Diploma in Technology - NDT),

அல்லது

தேசிய பயிற்சியாளர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை (National Apprentice and Industrial Training Authority - NAITA) வழங்கும் பொறியியல் அறிவியல் தேசிய டிப்ளோமா (National Diploma in Engineering Sciences),

அல்லது

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (Higher National Diploma in Engineering),

அல்லது

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (Diploma in Technology),

அல்லது

இலங்கைப் பொறியியலாளர் நிறுவனம் (Institution of Engineers, Sri Lanka - IESL) நடத்தும் பொறியியல் பரீட்சையின் பகுதி I-ஐ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

வேலைவாய்ப்புத் துறைக்கு தொடர்புடைய தேசிய தொழிற்தகைமை (National Vocational Qualification - NVQ) நிலை 6;

அல்லது

மேற்கூறப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளை வழங்கும் நிறுவனங்களுடனும் உயர்கல்வி அமைச்சுடனும் கலந்தாலோசித்த பின்னர், மேற்கூறப்பட்ட தகைமைகளில் ஏதேனும் ஒன்றிற்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (Tertiary and Vocational Education Commission - TVEC) அங்கீகரிக்கும் ஏனைய தொழில்நுட்பத் தகைமை.

III. உடற் தகைமைகள்

இலங்கைக்குள் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் பொருட்டான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளவியல் தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

IV. ஏனைய தகைமைகள்

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் அவசியமான அனைத்துத் தகைமைகளும், விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லா வகையிலும் பூரணமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

03. **சம்பள அளவு மற்றும் வகை**

இந்தப் பதவிக்குரிய மாதாந்த ஒருங்கிணைந்த சம்பள விகிதம் :

ரூபா 52,250-10×800-11×1190-10×1320-10×1350-100,040.00 சம்பள குறியீட்டு இலக்கம் - MN3 – 2025

04. **வயது எல்லை**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின்படி வயது 18 ஆண்டுகளுக்குக் குறையாமலும் 30 ஆண்டுகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (அதன்படி, 05.10.2008 அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்தவர்களும், 05.10.1996 அன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்களும் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.)

05. **சேவை நிபந்தனைகள்**

I. இந்தப் பதவி நிரந்தரமானது; ஓய்வூதியத் திட்டத்திற்குரியது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு ஏற்ப நியமனம் செய்யப்படும் விண்ணபதாரர்கள் கீழ் படிதல் வேண்டும்.

II. இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் மூன்று வருட (03) தகுதிகாண் காலத்திற்கு (Probationary Period) உட்படுத்தப்படுவர்.

III. அரச கரும மொழிச் சுற்றறிக்கை 18/2020 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளின் பிரகாரம், சேவையில் இணைந்து மூன்று (03) வருடங்களுக்குள், தாம் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழியிலும் உரிய தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

IV. இலங்கை தொழில்நுட்ப அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் இணைப்பு மொழித் தேவையினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

V. அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் கோவைக்கும் மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் கோவை, அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவித் தொழில்நுட்ப சேவைகள் வகையிலான பணிநிலை அத்தியட்சகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கும், திணைக்கள விதிமுறைகளுக்கும் மற்றும் அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

06. **பரீட்சை முறைமை**

I. இப் பரீட்சையானது காணி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படுவதுடன், அந்நிறுவனத்தின் தலைவரினால் தீர்மானிக்கப்படும் திகதி ஒன்றில் கொழும்பு நகரில் மாத்திரம் பரீட்சை நடாத்தப்படும்.

II. இப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

III. பரீட்சார்த்தி பரீட்சையின் போது தோற்றுகின்ற அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியின் மூலமே விடையளித்தல் வேண்டும்.

07. எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் -

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான சிந்தனைத் திறன், அவரின் பகுப்பாய்வு சிந்தனைத்திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான இவ் வினாத்தாளானது, பல்தேர்வு (MCQ) வினா முறையிலான பொருத்தமான வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும்.<br><br>( காலம் 01 மணித்தியாலம் – மொத்தப் புள்ளிகள் 100) |
| 2. பாடம் சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | 1) கட்டிட நிர்மாணம்<br>I. செங்கல் சுவர் மற்றும் கற்கட்டு சுவர் (இணைப்புகள், மூலைகள், வளைவுகள், ஈரத்தடுப்பு அடுக்குகள் (Damp-proof courses), லின்டல்கள் (Lintels), மற்றும் கோர்பல்கள் (Corbels))<br>II. சாந்துக் கலவைகளின் வகைகள், சிமெண்டு பூச்சு வேலைகள் மற்றும் கான்கிரீட் கலவை.<br>III. பல்வேறு வகையான இணைப்பு வேலைகள், இணைப்புப் பூச்சு (Pointing), பூச்சு வேலைகள் (Plastering), மேற்பூச்சு (Rendering), சுவர் வெட்டுதல் (Cutting chases), சுவர் தாங்குப் பலகைகள் (Wall plates) பொருத்துதல் மற்றும் தாங்குக் கட்டுகள் (Bracing).<br>I. பல்வேறு வகையான கூரைகள் (ஓடு கூரைகள், அஸ்பெஸ்டஸ் கூரைகள், அலைத் தகடு கூரைகள், அலுமினியத் தகடு கூரைகள், சிங்கள ஓடு கூரைகள் மற்றும் சம கான்கிரீட் கூரைகள்).<br><br>2) வர்ணம் பூசுதல்<br>I. பல்வேறு வகையான வர்ணப் பூச்சுகள், சுவர் மேற்பூச்சுகள், மரப்பணிகளுக்கான நிறைவு வேலைகள், வர்னிஷ் பூச்சு மற்றும் அரிப்பெதிர்ப்பு வர்ணப் பூச்சு.<br><br>3) வீதிகள்<br>I. நீர்வழங்கிகள் (Culverts) மற்றும் தாங்குச் சுவர்கள் (Retaining walls) அமைத்தல் மற்றும் நிர்மாணித்தல், அவற்றில் பயன்படுத்தப்படும் பொருட்கள் தொடர்பான அறிவு.<br>II. வீதியின் அடித்தளத் தயாரிப்பு, கற்கள் பதித்தல், தார் பூசுதல், கற்கள்/கிராவல் பரப்புதல் மற்றும் மேற்பரப்பு நீர் வடிகால்.<br><br>4) அடிப்படை நீர்வழங்கல் மற்றும் வடிகால்<br>I. சிறிய கட்டிடங்களுக்கான நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் குழாய்கள் பொருத்துதல், ஊடுருவல் குழிகள் (Soakage pits) அமைத்தல், நீர்முத்திரையுடன் கூடிய சுகாதார உபகரணங்கள் (Water-sealed sanitary fittings), நீர்த் தொட்டிகள் மற்றும் கிணறுகள் முதலியன.<br><br>5) அடிப்படை மின்சாரப் பணிகள்<br>(காலம்: 03 மணி நேரம் – மொத்தப் புள்ளிகள்: 100) |

08. **நேர்முகப் பரீட்சை –**

எழுத்துப்பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைக்கு (புள்ளி விபர வரிசைக்கு) அமைய, ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையிலானோர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். நேர்முகப்

பரீட்சையின்போது புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், விண்ணப்பதாரிகளின் சான்றிதழ்கள் மற்றும் தகைமைகள் (உடல் தகைமைகள்) பரிசீலனை மாத்திரமே இடம்பெறும்.

09. **பரீட்சைக் கட்டணம்**

பரீட்சைக் கட்டணம் ரூபா. 500.00 ஆகும். இப் பரீட்சைக் கட்டணத்தை "காணி ஆணையாளர் நாயகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்" என்ற பெயரில், பத்தரமுல்ல இலங்கை வங்கிக் கிளையிலுள்ள 7042571 ஆம் இலக்கத்தினைக் உடைய கணக்கில் வைப்பிலிடத்தக்கதாக விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர், நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டிருக்கும் ஏதேனும் ஒரு இலங்கை வங்கி (Bank of Ceylon) கிளையில் செலுத்தப்பட்டு பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை, விண்ணப்பப் பத்திரத்தின் உரிய இடத்தில் கழன்று விடாத வகையில் ஒட்ட வேண்டும். இப் பரீட்சைக் கட்டணங்களைத் தவிர வேறு எந்தவொரு கட்டணமும் இடம்பெற மாட்டாது என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன். இப் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீளச் செலுத்தப்பட மாட்டாது. பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை (Photo copy) உங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

10. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை**

(அ) விண்ணப்பப் பத்திரத்தின் இலக்கம் 01 முதல் 04 வரையிலான தலைப்புகள் முதலாவது பக்கத்திலும், எஞ்சியவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடக்கப்படும் வகையில் விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பான விபரங்கள் தனது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப் பத்திரங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் பத்திரங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படுதல் வேண்டும். அத்துடன், அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமையாத மற்றும் அரைகுறையான விண்ணப்பப் பத்திரங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதால், விண்ணப்பப் பத்திரத்தை அனுப்புவதற்கு முன்னர், அது வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கேற்ற வித்தில் அமைந்துள்ளதா என்பது குறித்தும், சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப் பப்பத்திரம் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்தும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது குறித்தும் மீண்டும் அவதானம் செலுத்துதல் வேண்டும். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை (Photo copy) உங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(ஆ) இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரம், 2026 ஆம் ஆண்டு ஒக்டோபர் 05 ஆம் திகதி ஆம் திகதிஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் "காணி ஆணையாளர் நாயகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், "மிஹிகத மெதுர", இல. 1200/06, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இத் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

(இ) விண்ணப்பப் படிவம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில், "காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவைப் பிரிவின் பணிநிலை அத்தியட்சகர் தரம் III பதவிக்கு அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026" எனத் தெளிவாக குறிப்பிடப்படுதல் கட்டாயமாகும்.

(ஈ) கையொப்பத்தை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட நபர் ஒருவரினால், விண்ணப்பப் பத்திரத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தற்சமயம் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கையொப்பங்களை உரிய திணைக்களத் தலைவரால் அல்லது அவர் சார்பாக அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர் ஒருவராலும், ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பங்களை ஒரு சமாதான நீதவான் (JP), சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, அரச பாடசாலை ஒன்றின் அதிபர், அரச சேவையில் நிரந்தர உத்தியோகத்தர் பதவிநிலை (Staff Grade) உத்தியோகத்தர், முப்படைகளின் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தர்களில் எவரேனும் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்

11. **பரீட்சைக்கு அனுமதித்தல் -**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் பூர்த்தி செய்தவர்கள் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குள் அமைந்த,

விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரினால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பிலான அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் www.landcom.gov.lk என்ற இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். தனது அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து வினவ முடியும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் தங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மத்திய நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது நாளிலேயே பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சை விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாள அட்டைகளில் ஏதேனும் ஒன்று மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

12. **பரீட்சை முடிவுகள் –**

இந்த அறிவித்தலின் 07 ஆம் பந்தியின் பிரகாரம், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைக்கு அமைய தயாரிக்கப்பட்ட முடிவுப் பட்டியல், பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரினால் காணி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் முடிவுகளைத் தனிப்பட்ட முறையில் அறிவிப்பதற்கு பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமையானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவி ஒன்றிற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாகக் கருதப்பட மாட்டாது.

14. பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அவ் விதிமுறைகளை மீறினால், பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன் / அவள் உள்ளாக நேரிடும். பரீட்சையின் பெறுபேறுகள் சம்பந்தமாக பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரின் தீர்மானமே இறுதியானதாகும்.

15. விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் அவதானமாக துல்லியமான விபரங்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் விதிமுறைகளின் பிரகாரம் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரருக்கு தகைமை இல்லை எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலப்பகுதியிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பதாரர் தகுதி இரத்துச் செய்யப்படலாம்.

16. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் காணப்படின், அது குறித்து தெளிவுபடுத்துவதற்கும் / தீர்மானம் எடுப்பதற்கும் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

17. இதிலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில ஊடக அறிவித்தல்களுக்கு இடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள ஊடக அறிவித்தலே சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

சந்தன ரணவீர ஆராச்சி,
காணி ஆணையாளர் நாயகம்.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் வைத்து,
1200/6, மிஹிகத மெதுர,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆம் திகதி.

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவைப் பிரிவின் பணிகள் மேற்பார்வையாளர் தரம் III பதவிக்கு அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026**

Open Competitive Examination for Recruitment to Grade III of the Post of Superintendent of Works in Supervisory Management Assistant Technological Service Category of Land Commissioner General's Department -2026

| |
|---|
| |

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலின் 06 வது பந்திக்கு அமைய பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
(விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்ற முடியாது)

சிங்களம் –1
தமிழ் – 2

(தொடர்புடைய இலக்கத்தைக் கூட்டுக்குள் எழுதவும்)

01. பெயர்

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (Mr./Mrs./Miss.):

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம் - GUNATHILAKA B.M.I.S.

.................................................................................................................................................................
.................................................................................................................................................................

1.2 முழுப் பெயர் ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):

.................................................................................................................................................................
..............................................................................................

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்):-

.................................................................................................................................................................
..............................................................................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. முகவரி:

2.1 நிரந்தர முகவரி: (ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துக்களில்):

.................................................................................................................................................................
.................................................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி : (சிங்களத்தில்/தமிழில்)

.................................................................................................................................................................
.................................................................................................................................................................

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி (ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துக்களில்):-

.................................................................................................................................................................
.................................................................................................................................................................

2.4 தொலைபேசி இலக்கம்:

கையடக்கத் தொலைபேசி: ...............................

நிரந்தரத் தொலைபேசி: ...........................................

03. **பால் நிலை: (✓ அடையாளமிடுக)**

பெண் ☐ ஆண் ☐

3.1 பிறந்த திகதி:

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி அன்று வயது:-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

04. விண்ணப்பதாரிக்குரிய நிர்வாக மாவட்டம்: ........................................

4.1 பிரதேச செயலாளர் பிரிவு:- ..........................................................................................

4.2 கிராம உத்தியோகத்தர் பிரிவு:- ...................................................................................

05. **கல்வித் தகைமைகள்**

5.1 **க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை**

சுட்டெண் (பரீட்சை எண்):-............................ வருடம் :-................

| | *பாடம்* | *சித்தி* | | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

5.2 **க.பொ.த. (உயர் தரம்) பரீட்சை**: சுட்டெண் (பரீட்சை எண்): .............. வருடம்: .....

| | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

5.3 **தொழில்சார் தகைமைகள்** :-

| *நிறுவனம்* | *பூர்த்தி செய்த பயின்ற பாடநெறி* | *கால எல்லை* | *சித்தி* | *சான்றிதழ் இலக்கமும் திகதியும்* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

06. கணினி அறிவு (Computer Literacy):-..................................................................................

07. ஏனைய தகைமைகள்:-..........................................................................................

08. நீங்கள் எப்போதாவது, ஏதேனும் ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா?

(தொடர்புடைய கூட்டுக்குள் ✓ அடையாளமிடுக.

'ஆம்' எனின், விபரங்களை கீழே குறிப்பிடவும்)

ஆம் ☐ இல்லை ☐

..................................................................................................................................................

09. **பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு விபரங்கள்.**

I. கட்டணம் செலுத்திய வங்கி - ................................ கிளை - ..........................................

II. செலுத்திய திகதி -........../...../.........செலுத்தப்பட்ட தொகை - ......................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கியின் கட்டண பற்றுச் சீட்டை சேதப்படுத்தாத முறையில் இங்கே ஒட்டவும் |

10. **விண்ணப்பதாரரின் பிரகடனம்:**

I. இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை மற்றும் சரியானவை எனப் பிரகடனப்படுத்துகிறேன். இந்த விண்ணப்பப் படிவத்தில் ஏதேனும் ஒரு விபரத்தையோ அல்லது சில விபரங்களையோ பூர்த்தி செய்யாமல் விடுவதால் அல்லது தவறாகப் பூர்த்தி செய்வதால் ஏற்படும் இழப்புகளை ஏற்றுக்கொள்ள நான் உடன்படுகிறேன். மேலும், இந்த அனைத்துப் பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் பிரகடனப்படுத்துகிறேன். பரீட்சையின் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட உடன்படுகிறேன். பரீட்சையை நடாத்தும் நிறுவனத் தலைவரினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்படும் விதிகளுக்கும், பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கீழ் படிவேன் என்றும் பிரகடனப்படுத்துகிறேன்.

II. என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்த பிரகடனம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், இப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், நியமனம் பெற்றதன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்பட்டவர் என்பதையும் நான் அறிவேன்.

திகதி ............................ .................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல்:-**

இந்த விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் ..................................................................... ஆகிய திரு./திருமதி/செல்வி அவர்களை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதோடு, அவர் எனது முன்னிலையில் .................................. ஆம் திகதி அன்று தனது கையொப்பத்தை இட்டார் எனச் சான்று பகர்கின்றேன்.

திகதி : ................................... ..........................................

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் : ............................................................

பதவி : .............................................................

முகவரி : .............................................................

(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

12. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ........................................................ ஆகிய தற்சமயம் இவ்வலுவலகத்தில் கடமையாற்றுகிறார் என்பதையும், அவரது சேவை திருப்திகரமானது என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் அவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தற்சமயம் வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சான்றளிக்கின்றேன்.

திகதி : ................................ ........................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

நிறுவனத் தலைவரின் பெயர் : .............................................................

பதவி : ..............................................................

முகவரி : ..............................................................

(அதிகாரபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தவும்):

09-11

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

## இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2026/2027)

இலங்கைவெளிநாட்டுச்சேவை(இனிமுதற்கொண்டு"சேவை" எனக் குறிப்பிடப்படும்) தரம் III இலுள்ள 25 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, கீழே இல. 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து, விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சார்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026, நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும், விண்ணப்பப்படிவமானது, இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையதளத்தில் "Our Service" என்பதன் கீழ் "Online Applications Recruitments/E.B. Exams" என்ற பிரிவில் கிடைக்கின்றது. 2026, செத்தெம்பர் 07 அன்று காலை 9.00 மணி முதல் 2026, ஒற்றோபர் 06 அன்று இரவு 09.00 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது அரசாங்க / மாகாண சபை சேவையில் பணியாற்றும் அதிகாரிகள், விண்ணப்பத்தின் ஒரு பிரதியைத் தமது தனிப்பட்ட கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும்போது, நிறுவனத் தலைவரால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் ஒரு பிரதியையும், சேவை உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். இறுதித் திகதி வரை காலம் தாழ்த்தி விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதில் ஏற்படும் தாமதத்தால் விளையும் பாதகமான விளைவுகளை விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

01. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**:

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், எழுத்துப் பரீட்சைக்கும், தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றவேண்டும் என்பதுடன், எழுத்துப் பரீட்சையிலும், நேர்முகப் பரீட்சையிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் தர வரிசை மற்றும் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் நியமனத்திற்கென தெரிவு செய்யப்படுவார்கள்.

02. **தேவைப்படும் தகைமைகள்:**

1. **கல்விசார்/தொழில்சார் தகைமைகள்:**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய அல்லது சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற பட்டம்

அல்லது

இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப் படும் பட்டம்

அல்லது

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 25A இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்.

II. **உடல் தகுதிகள்:**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலோ அல்லது உலகில் எந்த நாட்டிலோ தமது பதவியில் சேவையாற்றுவதற்கேற்ற உடல் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

III. **ஏனையவை:**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். (இரட்டைக் குடியுரிமையுள்ளவர்கள், இலங்கை வெளிநாட்டுச் சேவைக்குத் தெரிவு செய்யப் படும் பட்சத்தில், தமது வெளி நாட்டுக் குடியுரிமையை இரத்துச் செய்ய வேண்டு மென்பதுடன், தமது சேவைக் காலத்தில் வேறு எந்த நாட்டினதும் குடியுரிமை யையும் பெறலாகாது.)

(ஆ) விண்ணப்பதாரிகள் சிறந்த ஒழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும். (ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நேர்முகத் தேர்வின் போது, தங்களைப் பற்றிய பொலிஸ் அறிக்கையை நேர்முகத் தேர்வுக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.)

(இ) விண்ணப்பமுடிவுத் திகதியன்று, இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் எல்லா வழிகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ஈ) எந்தவொரு மதத்தினதும் தலைவராக நியமிக்கப்பட்டவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கவோ அல்லது இதற்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ தகுதியற்றவர்களாவர்.

(உ) ஒரு விண்ணப்பதாரி திறந்த போட்டிப் பரீட்சையில் அதிகபட்சமாக மூன்று முறை மட்டுமே தோற்றலாம்.

03. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

i. இச்சேவைக்கென தெரிவு செய்யப்படும் விண்ணப் பதாரிகள் அரசாங்க சேவை நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளின் அடிப்படையில் 2016.12.06 ஆந் திகதியிட்ட இலங்கை வெளிநாட்டுச் சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அதில் ஏற்கனவே மேற் கொள்ளப்பட்ட அல்லது இனிமேல் மேற் கொள்ளப்படக் கூடிய திருத்தங்களுக்கும் உட்பட்ட வர்களாகவிருப்பர்.

ii. இந்தப் பதவி நிரந்தரமானது ஓய்வூதியம் பெறத் தகுதியானது. மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிக்க வேண்டும் அரசாங்கத்தால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

iii. இப்பதவிக்கான நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டது. இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம், இலங்கை வெளிநாட்டுச் சேவையின் தரம் III இற்கு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் 03 வருட காலத்தினுள் I ஆவது "வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில்" சித்தியடைதல் வேண்டும்.

iv. 2020.10.16 ஆந் திகதியிட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 இன் பிரகாரம் உத்தியோகபூர்வ மொழியில்/மொழிகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

v. இந்நியமனமானது அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் தாபனக்கோவை, நிதிசார் முறைமைகள் மற்றும் பிற திணைக்கள ஒழுங்குமுறைகள் ஆகியவற்றுக்கு உட்பட்டதாகும்.

vi. இந்த வர்த்தமானி அறிவித்தலில் அல்லது இலங்கை வெளிநாட்டுச் சேவை பிரமாணக் குறிப்பில் வரையறுக்கப்பட்ட எந்தவொரு தகைமைகளையோ நிபந்தனைகளையோ பூர்த்திசெய்யாத அல்லது தவறான தகவல்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளை, அவர்கள் பதவியில் நியமிக்கப்பட்ட பின்னராயினும் பதவிநீக்கம் செய்வதற்கான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு.

04. **வயதெல்லை:**

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று, 22 வயதை எட்டியவராகவும் 28 வயதை அடையா தவராகவும் இருத்தல் வேண்டும். (அதன்படி, 2004.10.06 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பிறந்தவர்களும் 1998.10.06 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்தவர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்).

ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்ப தாரிகளெனில் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 35 வயதை அடையாதவராகவும் (அதன்படி 1991.10.06 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்தவர்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்) திருப்திகரமான சேவைப் பதிவினைக்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

i. மேலே 04 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டதன் நோக்கத்திற்காக, அரசாங்க சேவையின் விண்ணப்பதாரி என்பது, (தாபனக் கோவையின் 1 ஆம் அத்தியாயத்தில் வரையறுக்கப்பட்டவாறு) விண்ணப்ப முடிவுத் திகதியன்று அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தருமாவார் எனப் பொருள்படும்.

ii. தற்போது அரசாங்க சேவையிலுள்ள ஒரு விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடனடி முந்தைய ஐந்து வருடகால சேவை காலத்தின் போதோ அல்லது அவரது மொத்த சேவைக்காலம் 05 வருடங்களுக்கு குறைவானதெனில் அச்சேவைக் காலத்தின்போதோ திருப்திகரமான பதவி அறிக்கையைக் கொண்டிருந்தாலேயன்றி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராவர்.

iii. அரசாங்க சேவையிலுள்ள உறுப்பினர் ஒருவர் இந்த விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடனடி முந்தைய ஐந்து வருடகால சேவையில் அல்லது குறிப்பிட்ட நிறுவனத்தில் அவரது மொத்த சேவைக்காலம் ஐந்து வருடங்களுக்குக் குறைவாகவிருப்பின் அச்சேவைக் காலத்தின்போது உரிய திகதியில் எல்லா சம்பள அதிகரிப்பினையும் பெற்று, அவர் செய்த எந்தவொரு குற்றத்திற்காகவும் (எச்சரிக்கை தவிர) எந்தவொரு தண்டனையையும் பெற்றிருக்கவில்லையென்றால், அவர் திருப்திகரமான சேவைப்பதிவினைக் கொண்டிருக்கிறார் எனக்கருதப்படுவார்.

05. **சம்பள அளவு**:

2025.03.25 ஆம் திகதியிட்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் அட்டவணை I இன் பிரகாரம். இச்சேவைக்குப் பொருத்தமான மாதாந்த சம்பளம் பின்வருமாறு : ரூ. 82,150.00 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூ. 195,970.00 (SL-1-2025) - மாதாந்தம்

06. **எழுத்துப்பரீட்சை:**

I. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

II. விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட மூன்று மொழிகளில் ஒன்றில் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமென்பதுடன், விண்ணப்பித்த மொழியில் மட்டுமே பரீட்சையில் தோற்ற வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்பட்ட மொழி மூலமானது பின்னர் மாற்றப்படலாகாது.

III. எழுத்துப்பரீட்சை பின்வரும் பாடங்களிலுள்ள வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| *பாட இலக்கம்* | *பாடம்* | *காலம்* | *புள்ளிகள்* | *ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. | பொது வினாத்தாள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02. | உலக விவகாரங்கள் I | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 03. | உலக விவகாரங்கள் II | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 04. | கட்டுரை | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 05. | சுருக்கம் | 30 நிமிடங்கள் | 50 | 25 |
| 06. | பல்தேர்வு வினாப்பத்திரம்<br>* நுண்ணறிவுத் தேர்வு<br>* பொது அறிவு மற்றும் நடப்பு விவகாரங்கள் | 02 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் | 150 | 75 |
| 07 | மொழித்திறன் வினாத்தாள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

குறிப்பு:

- அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் முதலில் பல்தேர்வு வினாத்தாள் மட்டுமே நடாத்தப்படும்.
- பல்தேர்வு வினாத்தாளில் தேர்ச்சி பெறத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெற்ற பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே மீதமுள்ள பாடங்களுக்கான தேர்வு நடத்தப்படும்.

iv. தொழில்முறைப் பரீட்சை : பொருத்தமற்றது

v. தகுதியுடைமை மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை: அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டத்திற்கமைவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

(i) எழுத்துத் தேர்வின் ஏழு (07) வினாத்தாள்களிலும் தோற்றி, ஒவ்வொரு பாடத்திலும் தேர்ச்சி பெறத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களையும், 300-க்குக் குறையாத குறைந்தபட்ச மொத்த மதிப்பெண்களையும் பெற்ற விண்ணப்பதாரர்களில், பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போல் ஐந்து மடங்குக்கு மிகாத எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் மட்டுமே தகுதியுடைமை மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(ii) தகுதியுடைமை மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையானது, பொதுச் சேவை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தேர்வுக் குழுவால் நடாத்தப்படும்.

(iii) தகுதியுடைமை மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட மொத்த மதிப்பெண்கள், எழுத்துத் தேர்வின் மொத்த மதிப்பெண்களுடன் சேர்க்கப்பட்டு, ஒரு தகுதி வரிசை தயாரிக்கப்படும். பொதுச் சேவை ஆணைக்குழு, தகுதி வரிசை மற்றும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

vi. எழுத்துத் தேர்வின் பாடத்திட்டம்:

(அ) **பொது வினாத்தாள் :**

இந்த வினாத்தாள் இலங்கையின் அரசியல், சமூக கலாச்சார மற்றும் பொருளாதாரச் சூழல் பற்றியும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான நடப்பு விவகாரங்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திகள் பற்றியதிலும் பரீட்சார்த்தி கொண்டுள்ள அறிவினைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கென வடிவமைக்கப்பட்டது.

(ஆ) **உலக விவகாரங்கள் I :**

இந்த வினாத்தாள் உலக அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் உலகளாவிய போக்குகளையும் அவை இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் பற்றி ஆராய்வதில் விண்ணப்பதாரியின் இயலுமையை பரீட்சித்துப் பார்ப்பதற்கென நடப்பு உலக அரசியல் நிகழ்வுகள், ஐக்கிய நாடுகள் மற்றும் பிற சர்வதேச அமைப்புக்கள், மோதல் சூழ்நிலைகள் மற்றும் பல்வேறு தேசிய சர்வதேச இயக்கங்களின் நிகழ்வுகள் சம்பந்தமான வினாக்களை உள்ளடக்கியதாக இவ் வினாத்தாள் அமையும்.

(இ) **உலக விவகாரங்கள் II :**

இந்த வினாத்தாள் சர்வதேச அமைப்புகளின் வகிபாகம் பிராந்திய பொருளாதாரக் குழுக்களின் செல்வாக்கு, சுற்றுச்சூழல் மற்றும் நிலைபேறானஅபிவிருத்தி போன்றவிடயங்கள் மற்றும் அவை இலங்கைக்கு எவ்வாறு பொருந்தும் என்பன உள்ளிட்ட பொருளாதார அபிவிருத்தியில் தற்போதைய போக்குகள் தொடர்பான விடயங்கள் தொடர்பிலான வினாக்களைக் கொண்டிருக்கும்.

(ஈ) **கட்டுரை**:

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட தலைப்புகளில் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும். இந்தத் தலைப்புகள், கல்வித் துறையில் உள்ள எந்தவொரு பாடத்துடனும் தொடர்பில்லாதவை. இவை, விண்ணப்பதாரரின் பொது அறிவு மற்றும் நுண்ணறிவு, அத்துடன் அவரது சிந்திக்கும் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனைப் பரீட்சிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரரின் சிந்தனைத் திறன், தலைப்பை முன்வைக்கும் திறமை, அத்துடன் அவரது மொழி நடை மற்றும் கருத்தை முன்வைக்கும் திறன் ஆகியவற்றைக் கண்டறிய கட்டுரை பயன்படுத்தப்படுகிறது. இது தெளிவான மற்றும் வாசிக்கக்கூடியவாறான எழுத்தில் எழுதப்பட வேண்டும்.

**குறிப்பு:**

தெளிவாகவும் விடயத்திற்குத் தொடர்புடைய தாகவும் எழுதுவதன் முக்கியத்துவம் விண் ணப்பதாரர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. விடயத்தை முழுமையாக ஆராய்தல், விசாரணைத் திறன் எழுத்து நடை மற்றும் தனது கருத்துக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தும் திறன் ஆகிய வற்றிற்காக மதிப்பெண்கள் வழங்கப்படும்.

(உ) **சுருக்கம்:**

இந்த வினாத்தாள் கொடுக்கப்பட்ட பந்தி/ பந்திகளில் உள்ள அர்த்தத்தை நன்றாகப் புரிந்துகொண்டு, அதைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கவர்ச்சியான முறையில் வெளிப்படுத்துவதில் விண்ணப்பதாரிக்கு உள்ள திறனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக இரு பகுதிகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

(ஊ) **பல்தேர்வு வினாத்தாள்:**

இந்த வினாத்தாள், ஒவ்வொரு பிரிவிலும் 75 மதிப்பெண்களுக்கு 50 வினாக்களைக் கொண்டுள்ளவாறு பின்வரும் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருக்கும்

* **நுண்ணறிவுப் பரீட்சை:**

  இந்தப் பிரிவு, பரீட்சார்த்திகளின் தர்க்கத் திறனையும் பகுப்பாய்வுத் திறன்களையும் பரீட்சிக்கும் (நேரம்: 75 நிமிடங்கள்)

* **பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்வுகள்:**

  இந்தப் பிரிவு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக-கலாச்சாரத் துறைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்த பரீட்சார்த்திகளின் அறிவை பரீட்சிக்கும் (நேரம்: 75 நிமிடங்கள்)

(எ) மொழித்தேர்ச்சி வினாத்தாள்:

இவ்வினாத்தாள், மொழித்தேர்ச்சியை மதிப் பிடுவதற்காக வடிவமைக்கப்பட்டது.

(இது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 3 வினாத்தாள்களைக் கொண்ட துடன், இவ்வினாத்தாளுக்கு வழங்கப் படும் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். இவ்வினாத்தாளுக்கு வழங்கப்படும் கால அளவு 3 மணித்தியாலங்கள் ஆகும்)

சிங்களம் அல்லது தமிழ்மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், ஆங்கில மொழிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஆங்கில மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றுவோர், சிங்களமொழி அல்லது தமிழ்மொழிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

07. **தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சை :**

i. ஏழு (07) வினாத்தாள்களுக்கும் தோற்றி, ஒவ் வொரு வினாத்தாளுக்கும் குறைந்தளவு தேர்ச்சிப் புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமாகவும், செயலாளரால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டுப் புள்ளியான 300 இற்கு குறையாத மொத்தப் புள்ளிகளையும் பெற்ற விண்ணப்பதாரிகள் மட்டுமே தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். ஆனபோதிலும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது, நிரப்பப்பட வேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையின் ஐந்து மடங்கைவிடவும் அதிகமாக இருத்தலாகாது.

ii. தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட் சைக்குரிய புள்ளிகள் 100 ஆகும்.

iii. வெட்டுப்புள்ளிக்கான குறைந்தபட்ச மொத்தப் புள்ளிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் குறைக்கப்பட மாட்டாது.

iv. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகுதி யுடைமை மதிப்பீட்டுக்கென நியமிக்கப்பட்ட ஒரு நேர்காணல் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இந்த நேர்முகப் பரீட்சையின் நோக்கம் விண்ணப்பதாரி இச்சேவைக்குப் பொருத்த மானவரா என்பதை மதிப்பீடு செய்வதாகும். இக்குழு விண்ணப்பதாரியின் நுண்ணறிவு மனவிழிப்புணர்வு ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன் போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கும். விண்ணப்பதாரியின் பிற மொழித்தேர்ச்சி மற்றும் உயர் கல்வித்தகைமைகள் போன்றவையும் இந்த நேர்முகப்பரீட்சையின் போது மதிப்பீடு செய்யப் படும்.

v. விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்காணல் குழுவிடம் வழங்கப்பட மாட்டா.

vi. தகுதி வரிசையானது எழுத்துப் பரீட்சை மற்றும் தகுதியுடைமை மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும். இத்தகுதி வரிசையின் அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனங்கள் மேற் கொள்ளப்படும்.

vii. தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சையின் புள்ளியிடல் திட்டம் வருமாறு:

| | *தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சை -புள்ளியிடல் அளவுகோல்கள்* | *தனித்தனி புள்ளிகள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமை:**<br>பொதுச் சேவை ஆணையத்தின் சுற்றறிக்கை இல: 01/2025-இல் உள்ள விதிமுறைகளுக்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட<br>சிறப்புப் பட்டம் : | | 20 |
| | i. முதல் வகுப்புடனான பட்டம் | 20 | |
| | ii. இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடனான பட்டம் | 18 | |
| | iii. இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவுடனான பட்டம் | 16 | |
| | பொதுப்பட்டம் : | | |
| | i. முதல் வகுப்புடனான பட்டம் | 18 | |
| | ii. இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடனான பட்டம் | 16 | |
| | iii. இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவுடனான பட்டம் | 14 | |
| | (அதிகபட்ச தகுதிக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும்) | | |
| 02. | **பிற/தொழில்சார் தகைமை:**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற, | | 15 |
| | i. பட்டப்பின் படிப்பு | 15 | |
| | ii. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (ஒரு வருடத்திற்கு குறையாத) | 13 | |
| | iii. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தின் மூலமாகப் பெற்ற டிப்ளோமா (06 மாதங்கள்/720 மணித்தியாலங்களுக்கு குறையாத) | 10 | |
| | iv. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தின் மூலமாகப் பெற்ற டிப்ளோமா /கற்கைநெறிச் சான்றிதழ் (03 மாதங்கள் / 360 மணித்தியாலங்களுக்கு குறையாத) | 08 | |
| | (அதிகபட்ச தகுதிக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும்) | | |
| 03. | **ஆங்கில மொழித்தேர்ச்சி:**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற, | | 15 |
| | i. ஆங்கில சிறப்புபட்டம் | 15 | |
| | ii. பட்டப்படிப்பின் மொத்த மதிப்பெண்களில் 1/3 மதிப்பெண் பிரதான பாடமாக ஆங்கிலத்திற்கு வழங்கப்படுவதுமான பட்டம் (பொது இளங்கலைமாணிப் பட்டத்தின் கீழ்) | 08 | |
| | iii. ஆங்கில மூலத்தில் பெற்ற பட்டம் | 07 | |
| | iv. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், தொழிற்கல்லூரி அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவகத்தில் பெற்ற டிப்ளோமா (ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்திற்குக் குறையாத)<br><br>அல்லது<br><br>TOEFL (TOEFL-iBT Score 79, TOFEL-CBT Score 213, TOEFL-PBT, (Score 550 அல்லது அதற்கு மேல்) அல்லது IELTS (Score 6.0 அல்லது அதற்கு மேல்) போன்ற தகைமைகள் அல்லது அதற்கு இணையான தகைமைகள் | 07 | |

| | *தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சை -புள்ளியிடல் அளவுகோல்கள்* | *தனித்தனி புள்ளிகள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| | v. க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்திருப்பின் (இலங்கை அல்லது லண்டன் பாடத்திட்டத்திற்கமைய) | | |
| | அதிவிசேட சித்தி | 05 | |
| | விசேட சித்தி | 04 | |
| | திறமைச் சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |
| | (அதிகபட்ச தகுதிக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும்) | | |
| 04. | **வெளிநாட்டு மொழிகளில் தேர்ச்சி:** அரபு, சீன (மண்டரின்), பிரெஞ்சு, ஜேர்மன், ஹிந்தி, இத்தாலி, ஜப்பானிய, கொரிய, ரஷ்ய மற்றும் ஸ்பானிய மொழிகளில் தேர்ச்சி | | 10 |
| | i. இந்த மொழிகளில் ஒன்றைப் பாடமாக எடுத்த பல்கலைக்கழக பட்டம் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமாகவிருத்தல் வேண்டும்) | 10 | |
| | ii. க.பொ.த. (உயர் தரம்) | | |
| | அதிவிசேட சித்தி | 09 | |
| | விசேட சித்தி | 08 | |
| | திறமைச் சித்தி | 07 | |
| | சாதாரண சித்தி | 06 | |
| | iii. க.பொ.த. (சாதாரண தரம்) | | |
| | அதிவிசேட சித்தி | 05 | |
| | விசேட சித்தி | 04 | |
| | திறமைச் சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |
| | iv. அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்ற டிப்ளோமா (06 மாதங்கள்/ 720 மணித்தியாலங்களுக்கு குறையாத) | 05 | |
| | v. அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்ற டிப்ளோமா/கற்கைநெறிச் சான்றிதழ் (03 மாதங்கள்/ 360 மணித்தியாலங்களுக்கு குறையாத) | 03 | |
| | (அதிகபட்ச தகுதிக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும்) | | |
| 05. | **கணினி திறன்கள்:** | | 05 |
| | i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திடமிருந்து பெற்ற பட்டம் | 05 | |
| | ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவகத்தில் பெற்ற டிப்ளோமா (ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்திற்குக் குறையாத) | 03 | |
| | iii. அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட நிறுவகம் ஒன்றிலிருந்து பெற்ற கற்கைநெறிச் சான்றிதழ் (06 மாதங்கள்/720 மணித் தியாலங்களுக்கு குறையாத) | 02 | |
| | (தகவல் தொழில்நுட்ப பட்டம் அடிப்படைத் தகைமையெனில், இப்பிரிவின்கீழ் தகவல் தொழில்நுட்ப பட்டத்திற்கு புள்ளிகள் வழங்கப்படாது) | | |
| | (அதிகபட்ச தகுதிக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும்) | | |

| | *தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சை -புள்ளியிடல் அளவுகோல்கள்* | *தனித்தனி புள்ளிகள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 06. | **உத்தியோகபூர்வ மொழித்தேர்ச்சி (விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் தவிர்த்த) :** | | 10 |
| | i. க.பொ.த. (சாதாரண தரம்) முதல் மொழியாக | | |
| | அதிவிசேட சித்தி | 06 | |
| | விசேட சித்தி | 04 | |
| | திறமைச் சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |
| | ii. க.பொ.த. (சாதாரண தரம்) இரண்டாம் மொழியாக | | |
| | அதிவிசேட சித்தி | 04 | |
| | விசேட சித்தி | 03 | |
| | திறமைச் சித்தி | 02 | |
| | சாதாரண சித்தி | 01 | |
| | (அதிகபட்ச தகுதிக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும்) | | |
| 07. | **ஆளுமை, தொடர்பாடல் திறன்கள் மற்றும் விசேட திறன்கள்:** | | 25 |
| | ஆளுமை | 10 | |
| | தொடர்பாடல் திறன்கள் | 10 | |
| | நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் திறன்கள் | 05 | |
| | மொத்தம் | | **100** |

**குறிப்பு:** தகுதியுடைமை மதிப்பீட்டில் நேர்முகத் தேர்வில் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களில் பொருத்தமான காலங்கள் குறிப்பிடப்படவில்லையெனில், சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து எழுத்துமூலமாக அந்த சான்றிதழ்களின் காலவரையறையை உறுதிப்படுத்தி சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். உரிய திகதிகள் குறிப்பிடப்படாத அந்த வகையான சான்றிதழ்கள் எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் புள்ளிகள் வழங்குவதற்காக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

08. **விண்ணப்பிக்கும் முறை:**

நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தை ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என்பதை, கணினியை அணுகப் பயன்படுத்திய கைபேசி எண்ணுக்குக் குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வழிமுறைகளைப் பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது, அந்த வழிமுறைகளைக் கவனமாகப் பின்பற்றவும். அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்ற பிறகு விண்ணப்பப் படிவத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கருதப்பட மாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

09. **பரீட்சைக்கான அனுமதி :**

I. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதகளைப் பூர்த்தி செய்பவர்கள் மட்டுமே விண்ணப்பித்துளளனர் என்ற அடிப்படையில், விண்ணப்பங்கள் பெறப்படும் இறுதித் திகதிக்கு முன்னரோ அல்லது இறுதித் திகதியன்றோ முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரிடசை அனுதி அட்டைகளை இணையவழியில் மட்டுமே விநியோகிபபார். பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் இணையத்தள அறிவிப்பு/ குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அது குறித்துத் தெரிவிக்கும். ஒரு விண்ணப்பதாரர் தனது அனுமதி அட்டையைப் பெறவில்லை என்றால், அவர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவகத் தேர்வுகள் அமைப்புப் பிரிவிடம் அதுகுறித்து விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது, விண்ணப்பதாரர் இணையத்தள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு, அவர் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அடடை இலக்கம், மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தை அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தால் கோரபபடும். எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நகலையும், தேர்வுக் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதின் நகலையும் கைவசம் வைத்திருப்பது உதவியாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்த

பிறகு ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படுமிடத்தில், பரீட்சைகள் திணைக்களத்தை உரிய நேரத்தில் தொடர்புகொண்டு, விண்ணப்பத்தின்படி உரிய திருத்தங்களைச் செய்ய வேண்டும் பரீட்சை மண்டபத்திலோ/ நேர்முகத்தேர்வின் போதோ செய்யப்படும் திருத்தங்களுக்கான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

II. விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, அவர் தேர்வில் கலந்து கொள்வதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் அல்லது பதவிக்குத் தகுதியானவர் என்பதற்கான ஒப்புதலாகக் கருதப்படமாட்டாது.

III. அனுமதி அட்டையிலும் விண்ணப்பத்திலும் இடப்படும் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க நிறுவனமொன்றில் பணியாற்றும் பரீட்சார்த்தி தனது கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடமோ அல்லது அத்தகைய நிறுவனத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கென அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறெந்த அலுவலரிடமோ அத்தாட்சிப்படுத்திக் கொள்ள வேண்டும். பிற விண்ணப்பதாரர்களைப் பொறுத்த வரையில், அரசாங்க பாடசாலையின் அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு, இராணுவம், கடற்படை அல்லது விமானப் படையில் நியமிக்கப்பட்ட அதிகாரி அல்லது ஒரு நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி சபை அல்லது நிறைவேற்றுத்தர அதிகாரி, பௌத்த விகாரையின் விகாராதிபதி, நாயக்க பௌத்த துறவி, வேறேந்த மதவழிபாட்டு இடத்திலும் பதவியில் இருப்பவர் அல்லது மதகுரு போன்றவர்களிடம் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திக் கொள்ளலாம். விண்ணப்பதாரர், தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். அனுமதி அட்டையைக் கையளிக்கத் தவறுவோர் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

IV. ஒரு விண்ணப்பதாரர் தனக்கென குறித்து ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும், முதல் நாள் பரீட்சையின்போது, பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, தத்தமது அனுமதி அட்டைகளை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

10. **பரீட்சைக்கான கட்டணம்:**

தேர்வுக்கான கட்டணம் ரூ. 1,200.00 ஆகும். தேர்வுக் கட்டணத்தை, இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டண முறைகளின் கீழ் மட்டுமே செலுத்த வேண்டும்.

i. ஏதேனும் ஒரு வங்கி கடன் அட்டை (Credit Card) ஊடாக ;

ii. இணையவழிப் பரிவர்த்தனை வசதியுள்ள ஏதேனும் ஒரு வங்கியின் வரவு அட்டை (Debit Card) ஊடாக ;

iii. இலங்கை வங்கியின் (Bank of Ceylon) இணையவழி வங்கி முறை / ஃப்ளெக்ஸ் செயலி (Online Banking Method/Flex App) ஊடாக ;

iv. இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளை ஊடாக.

குறிப்பு :

(அ) மேற்கண்ட முறைகள் ஊடாக பணம் செலுத்துவது குறித்த வழிமுறைகள், இணையதளத்தில் பரீட்சைகள் தொடர்பான தொழில்நுட்ப வழிமுறைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) பணம் பெறப்பட்டமை ஒரு குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் ஊடாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும். தேர்வுக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ பணம் செலுத்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கண்ட கட்டண முறைகள் மூலம் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் ஏற்படும் எந்தப் பிழைகளுக்கும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட தொகை, எந்தக் காரணத்திற்காகவும் திருப்பித் தரப்படவோ அல்லது வேறு எந்தத் தேர்வுக்கும் மாற்றப்படவோ மாட்டாது.

11. **விண்ணப்பதாரரின் ஆள் அடையாளம்:**

பரீட்சார்த்தி, தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரிடம் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இந் நோக்கத்திற்காகப் பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தைச் சரிபார்க்கவும், அவர்கள் இலத்திரனியல் தொடர்பு சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதி செய்யவும் பரீட்சார்த்திகள் முகத்தையும் காதுகளையும்

மூடாமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். இதற்கு உடன்பட மறுக்கும் பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அது மட்டுமின்றி, பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை தங்கள் முகத்தையும் காதுகளையும் மூடாமல் இருக்க வேண்டும்.

12. **பெறுபேறுகள் வழங்கல்:**

இந்த அறிவித்தலின் பந்தி 06 இல் குறிப்பிடப்பட்டவாறு அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள், தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சைக்கு தெரிவுசெய்யப்படுவர். மேலும், இந்த இரண்டு மதிப்பீடு களிலும் அவர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில், பதவி வெற்றிடங்களின் எண்ணிக் கைக்குச் சமமான எண்ணிக்கையில், தயாரிக்கப் பட்ட பேறுபெற்று பெயர்ப் பட்டியல் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வழிகாட்டலின்பேரில் பெறுபேறுகள் சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

13. **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னதாக, விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட விபரங்கள் பொய்யானதென்றோ தவறா னதென்றோ அறியப்படின், அந்த விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியின் நியமனத்திற்குப் பின்னர், அவர் தவறான அல்லது பொய்யான விபரங்களை வழங்கியிருந்தாரென அறியப்படின், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கேற்ப அவர் சேவையிலிருந்து பணி நீக்கம் செய்யப்படுவார்.

14. இப்பரீட்சையை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகள் மற்றும் வழிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் ஆட்பட்டவர்களாவர். இந்த விதிகளை மீறுதல், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

15. இந்த வர்த்தமானி அறிவித்தலில் வழங்கப்படாத எந்த விடயமும், அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டதற்கேற்ப செயற்படுத்தப்படும் இந்த வெற்றிடங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ ஆன இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை, அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குள்ளது.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் ஏதேனும் மாறுபாடுகள் காணப்படின், சிங்கள மூல உரையே மேலோங்கி நிற்கும்.

17. நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது, நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் திகதியாகவோ அல்லது பொதுச் சேவை ஆணையத்தால் தீர்மானிக்கப்படும் பிற்காலத் திகதியாகவோ இருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கட்டளைக்கமைவாக,

அருணி ரணராஜ,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும்
சுற்றுலாத்துறை அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள்,
வெளிநாட்டு வேலைவாய்ப்பு
மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01,
2026, செத்தெம்பர் 04.

09-39

---

## ஹோமியோபதி மருத்துவச் சபை

## ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களைப் பதிவு செய்வதற்கான மூன்றாவது பரீட்சை - 2026

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஹோமியோபதி சட்டத்தின் 30(3) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல் ஆகும்.

ஹோமியோபதி சட்டத்தின் 30 (1) ஆம் பிரிவின் கீழ் ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களாகப் பதிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்ப தாரர்களுள் தகைமைபெற்ற விண்ணப்பதாரர்களுக்காக, 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஹோமியோபதி சட்டத்தின் 30(2) ஆம் பிரிவின் கீழ் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள மூன்றாவது எழுத்துப் பரீட்சை யானது, 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07, 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப.

3.00 மணி வரை நுகேகொட, ஹைலெவல் வீதி, இலக்கம் 144 இல் அமைந்துள்ள ஸ்ரீ தம்மா ராமயவில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பதிவாளர் (பதில்கடமை).

ஹோமியோபதி மருத்துவச் சபை,
இல 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,
வெலிசர,
ராகம.

09-44

---

## திருத்தம்

## கட்டிடங்கள் திணைக்களம்

## திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

(i) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்), III ஆம் தரம்

(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்), III ஆம் தரம்

(iii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வடிவமைப்பாளர் - பயிலுனர் தரம்

கட்டிடத் திணைக்களத்தில் மேல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான 2026.08.07 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்தியில் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதி 2026.09.18 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

பொறி. டபிள்யூ.ஆர்.என்.ஆர்.பிரேமச்சந்திர,
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்.

கட்டிடங்கள் திணைக்களம்,
செத்சிரிபாய,
பத்தரமுல்ல,
2026, செத்தெம்பர் 04.

09-48

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2026***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர** | .. | வெள்ளி | 04.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2026 |
| | | வெள்ளி | 11.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2026 |
| | | வெள்ளி | 18.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2026 |
| | | வெள்ளி | 25.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2026 |
| **ஒற்றோபர** | .. | வெள்ளி | 02.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2026 |
| | | வெள்ளி | 09.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2026 |
| | | வெள்ளி | 16.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2026 |
| | | வெள்ளி | 23.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2026 |
| | | வெள்ளி | 30.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2026 |
| **நவெம்பர** | .. | வெள்ளி | 06.11.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2026 |
| | | வெள்ளி | 13.11.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.10.2026 |
| | | வெள்ளி | 20.11.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2026 |
| | | வெள்ளி | 27.11.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2026 |

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.